சுருக்கம்

நிதி – பேரூராட்சிகள் நிர்வாகம் – 2011–12ம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.17,99,45,000/– மற்றும் இயக்கக மற்றும் பராமரிப்பு தலைப்பின் கீழ் ரூ.13,99,64,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது – திட்டப்பணிகள் மேற்கொள்ள அனுமதி கோருதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ2) துறை

அரசாணை (ப) எண். 46 | நாள்: 15.02.2012

படிக்க:

பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் நேர்முக கடித எண். 6717/2011 /உ4, நாள் 01.02.2012.

- - - -

ஆணை:–

பேரூராட்சிகளின் இயக்குநர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், 2011–2012ம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.17,99,45,000/– மற்றும் இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.13,99,64,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் இத்தொகையினை பின்வரும் திட்டப்பணிகள் பேரூராட்சிகளில் மேற்கொள்ள ஏதுவாக நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை:–

| வ. எண். | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | 2010–11ம் ஆண்டிற்கான கேளிக்கை வரி மானியத் தலைப்பின் கீழ் மயானம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகளுக்கு விடுவிக்கப்பட வேண்டிய எஞ்சிய நிலுவைத் தொகை | 106 | 6,88,98,000/– |

| | | | |
|---|---|---|---|
| 2 | அரசாணை (நிலை) எண்.164, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (குவ.2) துறை, நாள் 11.08.2010–ன்படி மேலூர் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தும் 4 பேரூராட்சிகளின் குடிநீர் பணிகளுக்கு விடுவிக்கப்டப வேண்டிய தொகை | 4 | 7,00,00,000/– |
| 3 | குடிநீர் அபிவிருத்தி பணிகள் | 4 | 60,37,000/– |
| 4 | சாலை மேம்பாட்டு பணிகள் | 23 | 1,82,85,000/– |
| 5 | புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 4 | 1,46,00,000/– |
| 6 | பேருந்து நிலைய மேம்பாட்டு பணிகள் | 2 | 21,25,000/– |
| | மொத்தம் | 143 | 17,99,45,000/– |

<u>இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை:–</u>

| வ. எண் | பணியின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | குடிநீர் அபிவிருத்தி பணிகள் | 13 | 3,78,50,000 |
| 2. | சாலை புனரமைப்பு பணிகள் | 55 | 7,43,64,000 |
| 3. | அலுவலக கட்டடம் புனரமைப்பு செய்தல் | 12 | 1,84,00,000 |
| 4. | பேருந்து நிலைய அபிவிருத்தி பணிகள் | 4 | 93,50,000 |
| | மொத்தம் | 84 | 13,99,64,000 |

மேற்படி பேரூராட்சிகளின் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசிலனை செய்தது. பரிசிலனையில் 2011–2012ம் ஆண்டிற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.17,99,45,000/– மற்றும் இயக்கக மற்றும் பராமரிப்பு நிதிப்பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை தலைப்பின் கீழ் ரூ.13,99,64,000/– மேற்சொன்ன பணிகளை மேற்கொள்ள ஏதுவாக நிதி விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது. மேற்காணும் தொகையினை விடுவிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுமதி மற்றும் அதிகாரமளித்து அரசு ஆணையிடுகிறது.

2. மேற்படி செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

<u>அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ரூ.17,99,45,000/–</u>

"3604 உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் – அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி – I திட்டத்தில் சேராதது AC அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை 09 உதவித் தொகை 02 மூலதன செலவுக்கான உதவித் தொகை (DPC No. 3604 00 193 AC 0923).

<u>இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை ரூ.13,99,64,000/–</u>

"3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் –193 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அறிவிக்கப்பட்ட பகுதி குழுக்கள் அல்லது அதற்கு சமமான அமைப்புகளுக்கு உதவி–I திட்டத்தில் சேராதது AD இயக்க மற்றும் பராமரிப்பு நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை –09 உதவி மான்யங்கள் –02 மூலதன செலவுக்கான மானியங்கள் (DPC 3604–00–193–AD- 0921).

3. மேலே பத்தி 1–ல் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று தமிழ்நாடு அடிப்படை வளர்ச்சி மற்றும் புதுப்பிக்கும் நிதி (PD A/c No.01G03099750BQ)யின் பொது வைப்புக் கணக்கில் வரவு செய்து இந்நிதியினைக் கையாண்டு வரும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை மற்றும் இயக்க மற்றும் பராமரிப்பு நிதிப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகை குழுவின் முடிவிற்கேற்ப விடுவிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அனுமதிக்கப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.438/FS/P/2012, நாள் 10.02.2012–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷீலா பாலகிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்:</u>
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை –108.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை –1.
மாநில கணக்காயர், சென்னை –9/18.
<u>நகல்:–</u>
கூடுதல் தலைமைச் செயலரின் தனி செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, குறளகம், சென்னை –108.
நிதி (ந.நி (ம) கு.வ./நிகு /IV/வழிவகை மற்றும் கடன்கள் ) துறை,
சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2 / பட்ஜெட்) துறை, சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

16.2.2012

(கி. தயாளன்)
அரசு சார்புச் செயலாளர்

16/2/12